**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC .**No.** 1094/2023

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 22–ம் தேதி புதன்கிழமை ம.சா.1 – வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **ம.சா.** | : 1 | | |
| **பெயர்** | : **ஜெயபால்** | **தொழில்** | : **ஆசிரியர்** |
| **த/பெ.** | : **ராவணன்** | **வட்டம்** | : அரியலூர் |
| **கிராமம்** | : அயன் ஆத்தூர் | **வயது** | : 44 |

<u>22.07.2026</u>

**(எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**<u>மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

எதிரியும் ஆசிரியர் என்றால் சரிதான். அந்த வகையில்தான் எதிரிக்கும் எனக்கு பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக எதிரியை எனக்கு தெரியும் என்றால் 10 வருடங்களாக தெரியும். எதிரியின் மனைவியும் ஆசிரியர் என்றால் சரிதான். எதிரிக்கு எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்று என்னுடைய புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பணம் கொடுத்த சமயத்தில் அந்த இடத்தில் சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு 2 வெற்று காசோலைகள் கொடுத்தாரா என்றால் இல்லை நிரப்பப்பட்ட 2 காசோலைகள்தான் கொடுத்தார். எதிரிதான் காசோலையில் தொகையை எழுதினாரா என்றால் எதிரி என்னிடம் நிரப்பப்பட்ட காசோலையை என்னிடம் கொடுத்தார். காசோலையில் யார் தொகையை எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. பணம் கேட்ட அன்றே எதிரிக்கு கொடுத்தேனா என்றால் ஆமாம். பணத்தை எந்த நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 நோட்டுகள் அடங்கிய 5 முழு கட்டுகளை கொடுத்தேன். 2

காசோலைகளிலும் 14.07.2023 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 07.09.2023 அன்று ஒரு காசோலையும், 08.09.2023 அன்று மற்றொரு காசோலையும் சிட்டி யூனியன் வங்கியில் செலுத்தினேன் என்றால் சரிதான். ஏன் ஒரே நாளில் காசோலைகளை தாக்கல் செய்யவில்லை என்றால் பணம் குறைவாக உள்ளதால் ஒரு காசோலையை ஒரு நாளும் மற்றொரு காசோலையை மறு நாளும் தாக்கல் செய்ய சொல்லி எதிரி சொன்னார். காசோலைகள் திருப்பப்பட்ட காரணம் என்னவென்றால் மேனேஜர் பணம் இல்லை என்று சொன்னார். ரிட்டன் மெமோவில் என்ன காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. ரூ. 3,94,000/– பணத்தை எந்த வங்கியிலிருந்து எந்த தேதியில் எடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் வங்கியிலிருந்து பணத்தை எடுக்கவில்லை. எத்தனை வருடங்களாக அந்த பணத்தை வைத்திருந்தேன் என்றால் நான் பணத்தை வைத்திருக்கவில்லை. அடகு நகையை மீட்பதற்காக நண்பர்களிடம் கடனாக வாங்கியது. எதிரியும் நானும் நீண்ட நாட்களாக பழக்கமாக இருந்ததால் மதுரை மற்றும் திருச்சியில் செயல்பட்டு வந்த கீரின் லைப் நிறுவனத்தில் பணம் கட்டுவதற்காக எதிரியிடம் நிறை பணம் வாங்கியிருந்தேன் என்றாலும் பணத்தை நிதி நிறுவனத்தில் போடாமல் நிதிநிறுவனம் திவாலாகிவிட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பணத்தை ஈடுகட்டுவதற்காக பங்கு சந்தையில் மீண்டும் பணத்தை கட்டுகிறேன் என்று சொல்லி எதிரியிடம் மீண்டும் பணம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாங்கிய பணத்தை நான் திருப்பி தராமல் ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி பயன்படுத்தாமல் வைத்திருந்த 2 காசோலைகள் என்னிடம் எப்படியோ வந்து அதை பயன்படுத்தி எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு அனுப்ப வில்லை என்று என்னுடைய புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எதிரி 03.10.2023 அன்று பதில் அறிவிப்பை எனது வழக்கறிஞருக்கு அனுப்பியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி

2021 லிருந்து புதிய காசோலையைதான் பயன்படுத்துகிறார் என்றாலும் பழைய காசோலையை பயன்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 4 பழைய பயன்படுத்தப்படாத காசோலைகள் காணவில்லை என்று எதிரி வங்கியில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பங்கள் எதிரி 2021–க்கு முன்பு போட்ட கையொப்பங்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி மற்றும் அவரது மனைவியும் ஆசிரியர்கள் என்பதால் அவர்கள் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் பெயர் ராதாகிருஷ்ணன் என்று என்னுயடை வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் பார்க்கவில்லை. எதிரி நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கவேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பை பள்ளி முகவரிக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. வங்கியில் காசோலைகள் திருப்பப்பட்ட காரணம் பணம் இல்லை என்பதால் அல்ல வேறு காரணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்யடிது என்றால் சரியல்ல. வங்கி மேலாளர் பணம் இல்லை என்று சொன்னார் என்று வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.